உ

கடவுள் துணை.

போர்மன்ன சுவாமிபேரில்

பத்தும் பதிகம்.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களாற்றமது

திருமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

கடவுள்துணை.

போர்மன்ன சுவாமிபேரில்

பத்தும் பதிகம்.

மருவுமுத லிறுவாக்ஷிபெறுகுமண முடைய
திறுமணிவச்ர முடியினழகும், மதிபோலவதனமு
மெரிதணற்பார்வையும் மலர்ந்த செம்பவளவாயும்,
உரம்பெற்றமார்பினிற் பணிகள்சிங்காரமும் உருத்
ராட்சமாலையழகும், ஒய்யாரகை வீச்சணிந்தகணை
யாழியும் உந்திசுழியானவயிறும், சுருகைவாங்கீட்
டிக் கட்டாரி பொடுசெல்லடம் தொட்டிரிக்கிடுமிடை
யது, சொல்லரியகிண்கிணிற் தண்டையொடுவெண்
டயம் சொலித்திடவமர்ந்தப்தமும் திரிலோகமுங்
கெடிபடைத்த துரைசிங்கமே உன்திருவருள்ளித்
தாளுவாய்,சிங்கபுரிவாசனே மங்கையர்கள்நேசனே
எனதுணைவ போததவராசனே 1

மரமனருள்பாலநீ அமரர்கள்சகாயநீபானுவொ
ளிவானவனுநீ, பஞ்சாத்தகொடி பூமண்டலமெலாம்

ஞெடில்பவனி வருகின்றதுரைநீ, அரகரமகேசநீவி பூதிருத்ராட்சநீ அறுமுகற்கிளேபோனுநீ, அங்காள தேவிக்குகந்தமணிசெல்வநீ அருஞ்சுடலே கார்த்தவனுநீ, கரியசதுர்புயமுடைய அரிமறுகநீ கொடிய காலனுக்கிடானநீ, கவலைகொண்டடியனுன் கூப்பி டும்வேளேயில் என்கலிதீர்க்கவந்தவனுநீ, திரிசூலி கௌமாரி எனதாயிசற்புத்ர சிகாமணியுநீயல்லவோ சிங்கபுரிவாசனே மங்கையர்கள்நேசனே என்துணை வபோததவராஜனே. 2

அன்றுமேதக்கன் வேள்விகான்தொடங்க வய னுமாபதிதிருமாலும், அமரறுமுனி வோரறுமறை யாளர் அஷ்டதிக்காவலாளர்களும், சென்றவன் துடங்கும்வேள்வியைக்கார்ந்துசெப்பியமணிதிகேட்டிலுக்கசிவனுமேகண்கள் கோபமதாக சேபகூயவர்முகத்துதித்து, சண்டமாருதம்போல் பூமியிற்குதித்து சடச்சடன்றேகியதக்கன், தலேதனையறுத்து வேள்வியையழித்து சமரதர்படைகளேவாட்டி, சென்றடைந்தம் ரற்பயமதையகற்றி தேவிபொன்கொலுவமர்ந்தவனே சிங்கபுரிவாசனே மங்கையர்கள்நேசனே என்துணைவபோததவராஜனே. 3

நெடிதானமுகமதில் குடிகொண்டகோபமோ நீள்விடவைஎன்றுசொலலாம், நெரித்தநொருபார்வைக்கு வேங்கைபுலி என்னலாம் நிமைகளக்கிளி என்னலாம், கொடிதானவானிடிக் கிடமென்னலா மொழிகள் குறைந்தகலை தந்தமெனலாம், கொக்கரித்திடுமோசைக் கொக்குமோ துப்பாக்கிகுண்டுபீரங்கிஎனலாம், திடிதான உனதுபுய மேருகிரிஎன்னலாம்தொடைகளதுவே மொழியெலாம், துஷ்டகோரங்களுக்கஞ்சாத மதமுடைய சுப்ரதீபமென்றேபகரலாம், திடமுடைய உனதுவலச் கொப்பாகவொப்பவும் சேயனென்னுலாகுமோ சிங்கபுரிவாசனே மங்கையர்கள்நேசனே என் துணைவபோததவராஜனே 4

வஞ்சனைப்பில்லி வைப்புசூனியமும் வறுமுரைப்பாட்டுடனேவல், வல்லரக்கிகள் மோகினிகள் காட்டேரிவாகுறல் வரும்போது பூதம், அஞ்சுதலில்லாதுஷ்ட தேவதைகளஷ்டமாவித்தையுன்றெழிலும், தட்டிடுவீரனிவையெலாமுந்த னடியர்பாலணுகிடவசமோ பஞ்சவிக்ஷரி உமையபார்வதிக்கொலுவமர்ந்தவனே, பரிவுடன்யான்செய்அஞ்சலுக்கிரங்கிபரிந்துவந்தென்வினையகற்றும், செஞ்சொலியின்மொழி

யோராறுமறையாளர் செழித்திடுந் தொண்டனுடைத னில், சிங்கபுரிவாசனே மங்கையர்கள்நேசனேஎன் துணைவபோததவராஜனே. 5

கடல்கொண்டசாராய முண்டாலு மும்முடை யகால்வயரதுக்காகுமோ, காவேரிஊற்றுபோல்கள் ளபிணியுண்ணினுங்கடுகளவுபோதைதருமோவடை போளி அப்பளங்கரியமுதுநெய்தயிர் வாழைப்பி லாவோடிளநீர், மலைபோல்நிறப்பினும் உன்னலை கொண்டநாவுக்கு மறுத்துண்டையாவதுண்டோ, மடவார்களாயிரம் பேர்களைப்புணரினும் மதக்காம வெறி நீங்குமோ, மாறுமல்வடமேறு கிரியோடமோ தினும் வலதுபுயவலிகுண்ணுமோ, திடமிலாப்புவி யிலுன்னடியனு னுன்பெருமை செப்பயென்னலறு மையே, சிங்கபுரிவாசனே மங்கையர்கள்நேசனே என் துணைவ போததவ ராஜனே 6

நஞ்சை யுண்டார்புதல்வ நாரணன்மருகனே நளினசிங்காரவடிவே, நலமானபரிமளக்கஸ்தூரிகந்த மும் நற்புனுகுவாசனைகளும், பஞ்சலட்சணமுட னேசிங்காரமாகவே பாரின்மேல்வருகுமழகே. பார்த் திடவுமெளிதாமோ பாவையர்கள் நடனமிட பால

னுக்கெதிராகியே அஞ்சணமந்திர மேவலொடுசூனிய மதிகூளிசாமண்டியும், அயர்த்துப்பயந்தோட அல கைகள்பாயவிட்டுஅலரிஅழுதோட அருள்வாய்,செ ஞ்சொலின்மொழியோரிடாறுத்தனது திருவருள ளிக்குநாளுளதோ, சிங்கபுரிவாசனே மங்கையர்கள் நேசனே என்துணைவபோதபிவராஜனே. 7

அண்டாதபூதமும் குறளிசாமுண்டியும் அதி உக்ரமானபேயும், அந்திமுனி சந்திமுனிலாடமுனி மச்சமுனி அடங்காதசடாமுனிகளும், துண்டாண காட்டேரிசன்னுசிலாடனும் துர்க்கைசாமளைபிடாரி, சொல்லுக்கடங்காத வல்லமலையாளரும் சுடுகொள் ளிவாய்ப்பேய்களும், கொண்ட விடிபோ விடித்தாற் பரித்தே வழியில் கொட்டாவிவிட்டபேயும், கூர் விழிமின்னுற்றனைபத்திதலை சுத்திவரும் கௌரிமுக ப்பேயெலாம், திண்டானஉனதுபதங்கண்டவுடனே தொழுதுசிதரிப் பரந்தோடுமே, சிங்கபுரிவாசனே மங்கையர்கள்நேசனே என்துணைவ போததவரா ஜனே. 8

கூவினனழைத்த குறள்கள்கேழ்க் கிலையோ கொஞ்சமும்செவியிலகேழ்க்கிலையே, கொடியபாதக

ன்யான்செய்பிழையதுவோ கோபமோ ஏதுநானறி யேன், தாவியான்முன்செய் தவக்குறைதானோ தந் தைதாய்தன்னை வைதேனோ, சற்குணமுடையோர்க் கிடர் வினைத்தேனோ சதுர்மறையோரைவைதேனோ, கோதிலாப்பெரியோருரைத்தடுத்தேனோகோவிலுட் பொருள்கவர்ந்தேனோ; குறுவயநரன்மால் தங்களை ப்பழித்தகொடியனோசற்றுநானறியேன், உன்தேவி சங்கோதியுடனெழுந்தெனக்குன் சேவைதந்தருள் புரிஐயா,சிங்கபுரிவாசனே மங்கையர்கள் நேசனே என் துணைவபோததவராஜனே. 9

உத்தண்டமாகவுஞ் சறுகைங்கிபாகையும் ஓங் குபிடிவாளசூலமும், உழத்தடி எரித்தடி வளத்தடி கள்சக்கரம்ஒப்பற்று துப்பாக்கியும், எத்திசையுமொ ருநொடியில் சுத்திவரும்தீபனே எங்கள்குடிகுலதெ ய்வமே, எங்கெங்குமுன்கீர்த்தி வையகந்தனிலே எ ப்போதும்கொண்டிடாயே, புத்திமதியில்லாத அடி யேனழைத்திட புகழுடனெதிர்விருவீர்,பூலோகமெ ங்குமேபாலனலுரைத்தமொழிபுகழ்பெர வளித்தரு ளுவாய், சத்தியுடைமீனுக்ஷி வாலாம்பிகைஎதிர் சற் புத்ரனுகவந்த, சுவாமி உன்திருவடிக் கொருகோடி வந்தனம்சாற்றிபணிவிடைகள்செய்தேன்,சித்ரமணி

மண்டபமாளிக் குகர்ந்திடும் சிறந்தமணி தோளழக
னே சிங்கபுரிவாசனே மங்கையர்கள்நேசனே என்
துணைவ போததவராஜனே. 10

சிரோர்ங்குகலியுகம் நாலாயிரத்திலாயிரத்திதொ
ண்ணூத்தஞ்சாண்டுதன்னில், திரமானஜெயவருடம்
மகரமாசத்தினில் தேதியிருபத்தாரினில், பேரோங்
குவாரம் வியாழம்சதுர்த்தசி பேசரிய புனர்பூசமும்
பெருமைபெரு மமுர்தயோகம் சித்தியோகமும் பீ
டிலா மிதுனந்தனில்; பாரோங்கு பெண்ணைக்கடுத்
தவடபால்வாழும்பத்தினிபுத்திலம்மை; பாலநான்ப
யனநகர்வாழ் கந்தசாமியிப்பதிகமதை யான்செப்பி
னேன்,சிரோங்குகவிதையில்பிழைகளெதுவாகினும்
உனதிருவரு ளளித்தாளுவாய், சிங்கபுரிவாசனே
மங்கையர்கள் வாசனே என்துணைவ போததவரா
சனே. 11

போர்மன்னசுவாமிபேரில்பத்தும்பதிகம்
முற்றிற்று.

—*—